1990 மே 9]

(ஈ) குடியிருப்புச் சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்ட முன்வடிவு, 1990.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடியிருப்புச் சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் :** இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(உ) நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு நிர்ணயித்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு, 1990.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1990-ஆம் ஆண்டு, தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு நிர்ணயித்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

**மாண்புமிகு நாஞ்சில் இ. மனோகரன் :** இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

**திரு. கோ. வீரையன் :** ஆன் எ பாயின்ட் ஆப் கிளாரிபிகேசன். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் முன்மொழிந்த மூன்று சட்டத்திலும் தொள்ளாயிரத்து தொண்ணூறாம் ஆண்டு, தொள்ளாயிரத்து தொண்ணூறாம்ஆண்டு என்றுசொன்னார்கள். அது 1990 ஆம் ஆண்டா? அல்லது இன்னும் ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்பு, ஏன் என்றால், தொள்ளாயிரத்து தொண்ணூறாம் ஆண்டு என்று சட்டத்திலே பதிவாகிவிட்டால்....சிரிப்பு